**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.700/2024 நாள்-18.07.2025

நீ.ம.சா.1-

இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 44 ன் படி ஆணையிட்டு பிரமாணம் உறுதி செய்யப்பட்டு சாட்சியின் முதல் விசாரணை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்- காஜாமைதீன் | தந்தையின் பெயர்- |
| விலாசம்- | தாலுகா- |
| வயது- | தொழில் |

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் துணை இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன் எனக்கு நீதிமன்றத்தில் இருந்த வரப்பெற்ற அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். கடந்த 18.03.2019 அன்று மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் நான் உதவி இயக்குநராக பணிபுரிந்த போது நீதிமன்ற கடித எண். 1912/2019 தேதி 14.03.2019 உத்தரவின் பெயரில் வழக்கறிஞர் திரு. காளியப்பன் அவர்கள் முத்திரை இடப்பட்ட காகித உறையை பெற்று எங்கள் ஆய்வகத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்களையும், பிரச்சனைக்குரிய கையொப்பங்களையும் ஒப்பிட்டு ஆய்வு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டிருந்தது. ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்கள் அ.வ.எண்.146/2009 மாவட்ட நீதிமன்றம் ஸ்ரீவில்லிபுத்தூர் வழக்கில் அனுப்பப்பட்ட அதே ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணங்களான பொது அதிகார ஆவணம் தேதி, 07.07.2009 என்று குறிப்பிட்ட ஆவணத்தில் உள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்களான A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களுடன் இவ்வழக்கில் பிரச்சனைக்குரிய ஆவணமான கிரைய உடன்படிக்கை ஆவணம் தேதி 12.02.2009 என்று குறிப்பிட்ட ஆவணத்தில் உள்ள கேள்விக்குரிய கையொப்பங்களான Q1 முதல் Q4 வரையுள்ள கையொப்பங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்து அந்த ஆய்வின் முடிவில் கீழ்கண்டவாறு ஆய்வறிக்கை

அளிக்கப்பட்டது.

ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பங்களான A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களை இட்டுள்ள நபர் கேள்விக்குரிய கையொப்பங்களான Q1 முதல் Q4 வரையுள்ள கையொப்பங்களை இடவில்லை என்று ஆய்வறிக்கை அளிக்கப்பட்டது. மேற் கண்ட ஆய்வின் முடிவிற்கான காரணத்தாள் அந்த ஆய்வறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்டது ஆய்வறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. காரணத்தாள் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது.

**6 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

என்னிடம் காட்டப்படும் ஆவணம் வாசாஆ.1 தான் கேள்விக்குரிய ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்கள் அடங்கிய தேதி 07.07.2009 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் தான் ஒப்புக் கொள்ளப்பட்ட ஆவணமாகும். 07.07.2009 ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் பி.வா.சாஆ.12 ஆக குறியிடு செய்யப்படுகிறது. நான் எம்.எஸ்சி. தடய அறிவியல் பாடத்தில் முதுநிலை பட்டப்படிப்பு படித்துள்ளேன். தடய அறிவியல் துறையில் கையொப்பங்களை ஒப்பிட்டு பார்க்கும் துறையில் 25 ஆண்டுகள் அனுபவம் இருக்கிறது.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

பிவாசாஆ.12 யை பொறுத்து கையெழுத்து ஒப்பிட்டை தவிர வேறு வகையில் பி.வா.சா.ஆ.12 க்கும் எனக்கும் தொடர்பு இல்லை என்றால் சரிதான். பொதுவாக கையெழுத்து என்ன நடைமுறையின் படி ஒப்பிடு செய்து அறிக்கை தாக்கல் செய்வோம் என்று கேட்டால் கையெழுத்து குணாதிசியங்கள், அறிவியல் பூர்வமான குணாதிசியங்களை ஆய்வுசெய்து அறி க்கை தாக்கல் செய்வோம். அறிவியல் பூர்வமான

குணாதிசியங்களை பொறுத்து நிலையான வழிகாட்டுதல் இருக்கிறது அதன் முலம் ஆய்வு செய்கிறோம். அதுபோன்ற வழிகாட்டுதலின் பெயரில் மேற்கண்ட ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது என்று எங்களுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் அறிக்கையில் குறிப்பிடவில்லை இந்த அறிக்கைகான அலுவலக கோப்பில் உள்ளது. அலுவலக குறிப்புகளை சேர்த்து பார்த்தால் தான் அறிக்கை யில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் தெரியவரும் என்றால் சரியல்ல. அறிவியல் பூர்வமான காரணங்களை ஏற்கனவே காரணத்தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது. விவரமான ஆய்வறிக்கை அலுவலக கோப்பில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் காரணத்தாள் குறைபாடான அறிக்கை என்றும், நீதிமன்றம் கேட்டுக் கொண்டபடி முழுமையான அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றும், என்னுடைய அறிக்கை நிராகரிக்கக்கூடியது எ ன்றால் சரியல்ல. நான் எம்எஸ்சி தடயஅறிவியல் படிப்பு படித்திருந்தாலும் கையெழுத்து ஒப்பி ்டை பொறுத்த எந்த வித பயிற்சியும் பெறாமல் நேரடியாக அரசு வேலையில் சேர்ந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரியல்ல. எனக்கு முறையாக சிறப்பு பயிற்சி 1 வருடம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பாகவே 5 ஆண்டுகள் சாதாரண இயல்பு நிலை பயிற்சியும் வழங்கப்பட்டும் முறையாக தேர்வு நடத்தப்பட்டும் அதன் அடிப்படையில் ஆவண நிபுணர் என்று சான்றிதழ் அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆவண நிபுணர் என்று சான்றிதழ் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆவண நிபுணர் என் று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யாததாலும் சிறப்பு பயிற்சி எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்று ஆவணங்கள் தாக்கல் செய்யததாலும் நான் ஆவண நிபுணர் என்ற கூற்றில் இருந்து நிராகரிக்கப்பட க்கூடிய நபர்என்றால் சரியல்ல. பொதுவாக என்ன நடைமுறையை பயன்படுத்தி ஒரு ஆவணத்தை ஒப்பிடு செய்யப்ட்டது என்று

முழுஅறிக்கையும் ஆய்வறிக்கையோடு தாக்கல் செய்யப்பட்டால் மட்டுமே அந்த ஆய்வறிக்கை முழுமை பெற்ற ஆய்வறிக்கை என்று கருத முடியும் என்றும், நான் அவ்வாறு தாக்கல் செய்யாததால் என்னுடைய ஆய்வறிக்கை நீ.ம.சா.ஆ.1, 2 நிராகரிக்க கூடியது என்றால் சரியல்ல. பொது அதிகாரத்தில் உள்ள A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போய் உள்ளது என்று நீ.ம.சாஆ.1,2 குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. காரணத்தாளில் குறிப்பிட்டுள்ளேன். நீ.ம.சாஆ.2 ல் ஒப்புக் ொள்ளப்பட்ட கையொப்பங்கள் இயல்பான நிலையில் கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது அவற்றிக்கிடையே இயற்கையான மாறுபாடுகள் காணப்படுகிறது என்றும், அவை களுக் இடையே கையெழுத்து குணாதிசியங்கள் ஒன்றோடு ஒன்று பொருந்தி காணப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளேன். இயற்கையான மாறுபாடுகள் A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் எந்தெந்த கையொப்பங்களில் மாறுபாடுகள் காணப்படுகிறது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியுமா என்று கேட்டால் A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் என்னென்ன இயற்கையான மாறுபாடுகள் என்று தனியாக குறிப்புகள் இல்லை. தனியாக குறிப்புகள் எதுவும் இல்லாமல் தான் A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் இயற்கை மாறுபாடுகள் என்னென்ன என்று குறிப்பிட்டு கூறாமல் பொத்தம் பொதுவாக தான் அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. A1 என்ற கையொப்பத்தில் அடிக்கோடு இடவில்லை. A2 கையொப்பத்தில் அடிக்கோடு இடப்பட்டு அது பினனோக்கி திரும்பியுள்ளது. A3 கையொப்பத்தில் அடிக்கோடு முடியும் இடத்தில் பின்னோக்கி திரும்பாமல் சிறிது வளைந்து காணப்படுகிறது. A4 கையொப்பத்தில் நேர்கோடாக அடிக்கோடு அமைக்கப்பட்டு சிறியதாக திருப்பம் உள்ளது. A5 கையொப்பத்தில் அடிக்கோடு இடவில்லை. A6 கையொப்பத்தில் சற்று குறுகலான அடிக்கோடு கீழ்நோக்கி திரும்பப்பட்டுள்ளது. A7 கையொப்பத்தில் அடிக்கோடு கடைசியான கோடுடன் இணைத்து

போடப்பட்டுள்ளது. A8 கையொப்பத்தில் அடிக்கோடு இடப்பட்டு 2 சிறு கோடுகள் காணப்படுகிறது. A9 கையொப்பத்தில் அடிக்கோடு இடப்பட்டு பின்னோக்கி நன்றாக திரும்பி காணப்படுகிறது. A10 கையொப்பத்தில் அடிக்கோடு முடியும் இடத்தில் ஒரு நீள் வட்டத்துடன் காணப்படுகிறது. A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் M என்ற எழுத்துக்கள் கீழ் நோக்கிய நேர்கோடு ஒன்று போட்டப்ட்டு ஒழுங்கற்ற கோடுகள் இணைத்து மீண்டும் ஒழுங்கற்ற கோடுகள் முடியும் இடத்தில் மீண்டும் கீழ்நோக்கிய நேர்கோடுடன் முடிக்கப்பட்டுள்ளது இவற்றில் ஒழுங்கற்ற நேர்கோடுகளும் , வடிவங்களும் ஒழுங்கற்ற கோடுகள் இணைக்கப்படும் விதங்களும் கருத்தில் கொள்ளப்பபட்டு A1 ல் நீள் வட்ட வடிவிலான வளைகோடுகள் எதுவும் காணப்படவில்லை. A2 ல் ,இரண்டு நீள் வட்ட வளைககோடுகள் காணப்படுகிறது. A3 ல் இரண்டு நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. A4,5 ல் 3 நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. A6 ல் 1 நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. A7,8 ல் 3 நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. A9 ல் 6 நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. A10 ல் 1 நீள் வட்ட வளைகோடுகள் காணப்படுகிறது. மேற்கண்டவைகள் கீழிருந்து மேல்நோக்கி செல்லும் வளைகோடுகள் ஆகும். மேலிருந்து கீழ்நோக்கி செல்லும் வளைகோடுகள் A1,2,4,5 ல் 3 ம். A3,6,10 ல் 4, A7,8,9,ல் 5 ம் காணப்படுகிறது. A1 முதல் A10-களில் நீளமும், உயரமும் மாறுபாடு ஏற்பட்டுள்ளது. ஒரு மனிதர் பேனாவை அழுத்தி பிடித்து கையெழுத்திடும் போதும், மிதமான அழுத்ததில் கையெழுத்து இடும் போதும் லேசாக அழுத்தி பிடித்து கையெழுத்து இடும் போது மாறுபாடு ஏற்படும். பி.வா.சா.ஆ.12 ல் 10 கையெழுத்துக்களும் ஒழுங்கற்ற கோடுகளால் போடப்பட்ட கையொப்பங்கள் என்றால் M என்ற எழுத்தை தொடர்ந்துபோடப்பட்டுள்ள கோடுகள் அனைத்தும் ஒழுங்கற்ற கோடுகள் ஆகும். பி.வா.சா.ஆ.12 ல் கையெழுத்து இட்ட நபர் ஒரே நேரத்தில் கையெழுத்து இடும்போது

மாறுபாடுடன் தான் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். ஒரே நபரால் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு கையொப்பங்கள் இடும்போது மாறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டா என்று கேட்டால் மாறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உண்டு. A1 முதல் A10 வரையுள்ள என்னென்ன மாறுபாடு உள்ளது என்று குறிப்பிட்டு நீ.ம.சா.ஆ.1,2 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.12 ல் உள்ள மாறுபாடு உள்ள கையொப்பங்கள் போன்றே வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பங்களில் மாறுபாடுகள் உண்டு என்றால் கையொப்பங்களின் குணாதிசியங்கள் மாறுபாடுகிறது. Q1 முதல் Q4 ல் உள்ள கையெழுத்துகளில் என்ன மாறுபாடு உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை. Q1 முதல் Q4 ல் உள்ள கையெழுத்துகளில் மாறுபாடுகளை குறிப்பிட்டிருந்தால் பி.வா.சா.ஆ.12 ல் உள்ள கையொப்பங்களுடன் ஒத்து'போயிருக்கும் என்றும், அதனால் தான் Q1 முதல் Q4 ல் உள்ள கையெழுத்துகளில் உள்ள மாறுபாடுகளை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நீ.மா.சா.ஆ.2 ல் உள்ள மாறுபாடுகள் பி.வா.சா.ஆ.12 லும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. Q1 முதல் Q4 ல் உள்ள கையெழுத்துகளில் உள்ள மாறுபாடுகள் மற்றும் வேறுபாடுகள் பி.வா.சாஆ.12 ல் A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் காணப்படுகிறது என்றும் பி.வா.சா.ஆ.12 ஒப்புக் கொள்ளப்பட்ட கையொப்பம் என்பதால்A1 முதல் A10 வரையுள்ள கையொப்பங்களில் காணப்படும் மாறுபாடுகள் மற்றும் வேறுபாடுகளை மறுத்தும், மறைத்தும் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 ல் உள்ள கையொப்பங்களுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவங்கள் வா.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பங்களுக்கு முக்கியத்துவம் அளித்து கருத்துரை வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ. 1,2 அறிக்கைகள் முறையான வழிகாட்டுதலின் பெயரில் வழங்கப்படாத அறிக்கைகள் என்றும் பி.வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.1 உள்ள கையொப்பங்கள் குறித்து குறைபாடுகளுடன் கூடிய அறிக்கையை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே நிராகரிக்ககூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.